தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 31, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 ஏப்ரல் 13, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்"

செய்யக்கூடிய செயலைக் குறித்து, ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு முயலுபவருக்கு முடியாதது என்று ஒன்றுமில்லை.

1. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். என்ன இது? கொஞ்சம்கூட விவரம் தெரியாமல் இருக்கிறீர்கள்!

2. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள், 11–4–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள் சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 முதல் 1957 வரை மற்றும் 1957 முதல் 1962

வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1983 முதல் 1986 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

3. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா எண் 341, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

341—

கால்நடை மருத்துவமனை

***53924—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, தேவஸ்தானம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, தேவஸ்தானம் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000–க்கும்